Deputy Director of Agriculture
31 AUG 2020
Agri Business, Tiruppathur-635 601.

**சென்னை-32, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணைகள்.**
**முன்னிலை: திரு.சு.ஜ.சிரு, இ.ஆ.ப.,**

**செ.மு.ஆ.எண்.வேஅநிபி.3/17317/2020** **நாள்:25.08.2020.**

**பொருள்** : நியமனம் - தமிழ்நாடு அமைச்சுப்பணி - தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி-4ல் அடங்கிய பணிகள்-நேரடித் தேர்வு-2018-2019 மற்றும் 2019-2020 –ஆம் ஆண்டில் இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) பதவிக்கு தேர்வு செய்யப்பட்டு இத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணை வழங்கி உத்தரவிடல்.

**பார்வை** :
1. செயலர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-3 கடித எண் 2359/PSD-1/2020, நாள்:29.05.2020.
2. வேளாண்மை இயக்குநர், சென்னை-5 அவர்களின் செ.மு. ஆணை. எண். அநிபி.5/22094/2020, நாள்:05.08.2020.

******

**ஆணை:**

பார்வை (2)-ல் உள்ள செயல்முறை ஆணையின்படி, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் 2018-2019 மற்றும் 2019-2020 -ஆம் ஆண்டுகளில் போட்டித் தேர்வுகள் மூலம் தற்காலிகமாகத் தெரிந்தெடுக்கப்பட்டு, இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) பதவியில் ரூ.19500-62000 (புதிய ஊதிய விகிதம்) எனும் ஊதிய விகிதத்தில் (தகுதியான இதர படிகளுடன்) இத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு நபர்களுக்கு கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளின் பேரில் இணைப்பிலுள்ளவாறு இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) ஆக பணி நியமனம் வழங்கி ஆணையிடப்படுகிறது.

1. பணியில் சேரும் போது உடல் தகுதிச் சான்றினை சமர்ப்பிக்க வேண்டும். உடல் தகுதி குறித்து உரிய தலைமை அலுவலர் திருப்தியடைந்த பின்னரே பணியேற்க அனுமதிக்கப்படுவார்கள். உடல் ஊனமுற்ற நபரை பொறுத்தவரை, ஊனத் தன்மை, ஊனத்தின் சதவீதம் மற்றும் பணியாற்றும் திறன் குறித்து மருத்துவக் குழுவின் மூலமாக சரிபார்க்கப்பட வேண்டும்.

2. பணியேற்கும் போது மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலக பதிவு அட்டை, பிறந்த தேதி, வயது சான்று, சாதி சான்று, கல்வித் தகுதிச் சான்று மற்றும் புகைப்படம் ஆகியவற்றை சமர்ப்பிக்க வேண்டும். அதன்படி சான்றுகள் சரிபார்க்கப்படும் எனவும், நபர் பணியேற்கும் போது புகைப்படத்துடன் விண்ணப்பதாரரின் தோற்றம் சரிபார்க்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

3. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தெரிவு செய்யப்பட்டது முற்றிலும் தற்காலிகமானதே என்றும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தினால் மூதுரிமை நிர்ணயம் செய்து, உறுதி செய்த பின்னரே தனியரின் பணி வரன்முறை செய்யப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.
4. இந்நியமன ஆணை கிடைக்கப் பெற்ற 15 நாட்களுக்குள் நியமனம் செய்த அலுவலர் முன் பணியில் சேருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. இது தொடர்பாக கால அவகாசம் கோருவது குறித்தும் பிற அலுவலகங்களுக்கு மறு ஒதுக்கீடு கோரி முறையீடு செய்தாலும் ஏற்கப்படமாட்டாது எனவும் குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் பணியேற்காத விண்ணப்பதாரரின் பெயர் தெரிவுப் பட்டியலிலிருந்து நீக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.
5. பணியாளர்கள் பணியேற்றபின் தனது வேலை வாய்ப்பு அலுவலக பதிவு அட்டையினை தாம் பணியேற்ற அலுவலகத் தலைவரிடம் உடனடியாக ஒப்படைக்கப்பட வேண்டும்
6. இந்த தற்காலிக பணி நியமனம், விண்ணப்பதாரரின் விண்ணப்பத்தில் உள்ள விவரங்களின் அடிப்படையில் வழங்கப்படுகிறது என்றும் இதில் ஏதும் தவறானவை என பின்னர் கண்டறியப்பட்டால் விண்ணப்பதாரரின் தேர்வும் பணி நியமனமும் முன்னறிவிப்பின்றி இரத்து செய்யப்படும் எனவும் பணியாளருக்கு தெரிவிக்கப்படுகிறது.

**இணைப்பு:** நியமனம் செய்யப்பட்டுள்ள
விபரம் புகைப்படத்துடன்

**ஒம்/-சு.ஜ.சிரு**
**வேளாண்மை விற்பனை மற்றும்**
**வேளாண் வணிக ஆணையர்**

**பெறுநர்**
**இணைப்பில் குறிப்பிட்டுள்ள நபர்கள்**
நகல் : வேளாண்மை இயக்குநர், சென்னை-5
நகல்: வேளாண்மை கூடுதல் இயக்குநர் இவ்வலுவலகம்.
நகல்: வேளாண்மை துணை இயக்குநர் (வேளாண் வணிகம்) கள்ளக்குறிச்சி, கடலூர் மற்றும் திருப்பத்தூர்.
நகல்: பொநிபி.3இருப்புக் கோப்புக்கு

//உத்தரவின்படி//

ஆட்சி அலுவலர். 26/8/2020

மா.மு.

O/o. Commissioner of Agrl. Marketing and
Agri. Business, Chennai-32.

**ANNEXURE-I**

| Sl. No | TNPSC Sl.No. | Name & Address of the Candidate/ Register No. | Date of Birth/ Community Qualification/ | Office to which posted now |
|---|---|---|---|---|
| 1 | 84 | P.Kulanthaivelu,<br>No.1/145 Kuppagoundan Valavu,<br>Ramireddypatti Post, Salem District<br>Tamil Nadu<br>PinCode: 636 501<br>Reg.No.0701032167 | 10.02.1995<br>MBC/DC<br>B.E | O/o. Deputy Director of Agriculture (AB) Kallakurichi |
| 2 | 92 | N.Ranjith Kumar.<br>No.5/71 Johimanur,<br>Moolakkadu, Mettur,<br>Salem District, Tamil Nadu<br>Pincode: 636 452<br>Reg.No.1705013327 | 03.06.1997<br>MBC/DC<br>B.E | O/o. Deputy Director of Agriculture (AB) Cuddalore |
| 3 | 32 | G.Keerthana<br>No.106 Bajanaikoil Street,<br>Dhamalearimuthur Village and Post<br>Tirupattur Taluk, Vellore District<br>Tamil Nadu<br>Pincode: 635 853<br>Reg.No.2707020160 | 21.09.1999<br>MBC/DC<br>H.S.C | O/o. Deputy Director of Agriculture (AB) Tirupattur |

Sd/-S.J. Chiru
Commissioner of Agricultural Marketing
and Agri Business

//By order//

Administrative Officer
26.8.2020